ஓம்சக்தி

அனைத்தும் சக்தி மயம் !

அனைத்தும் அன்பு மயம் !



அருள்மிகு அன்னை ஆதிபராசக்தி

# அன்னை ஆதிபராசக்தி அறநிலையம் மற்றும் அருள்ஜோதி வழிபாட்டு சபை

எண்.4, புகழேந்தி தெரு, பெரியார் நகர்,
பள்ளிக்கரணை, சென்னை –600 100.
போன்: 044 22460820, 22462910, 9962884902.
Web: pallikaranaisakthi.org | Email:pallikaranaisakthi@gmail.com



மந்திரப்பாவை அம்மன்

## மகாலட்சுமி ஆகர்ஷண மந்திர வேள்வி வழிபாடு பூஜை

நாள் :– 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:– காலை 09 மணி முதல் 11 மணி வரை
பிற்பகல் 01 மணி முதல் 03 மணி வரை
மாலை 04 மணி முதல் 06 மணி வரை

சுமார் 1300 வருடங்களுக்கு முன்னர் கேரளாவில் உள்ள காலடி எனும் ஊரில் மகான் ஆதிசங்கரர் துறவு மேற்கொண்டு வாழ்ந்து வந்தார். துறவியர்களின் வாழ்வின் விதிப்படி தமக்கென ஒரு பொருளும் சொந்தம் கொண்டாடாமல் இருக்க வேண்டும். உணவிற்கு சில இல்லங்களில் கையேந்தி உணவு பெற்று உண்ண வேண்டும். இதனையே ‘‘உஞ்சவிருத்தி’’ என்பர்.

இவ்வாறே மகான் ஆதிசங்கரரும் சில இல்லங்களை நாடிச்சென்று கையேந்தி உணவு யாசிப்பார். ஒருமுறை மகான் ஆதிசங்கரர் அவர்கள் தமது சன்னியாச விதிப்படி யாசகம் புரிந்து வரும் பொழுது மிக வறிய குடும்பத்தில் யாசிக்க நேர்ந்தது, இல்லத்தில் இருந்த தம்பதியினருக்கு தெய்வ உருவாகவே காட்சியளித்த மகான் சங்கரருக்கு ஏதும் உண்பதற்கு தானம் கொடுக்க இல்லத்தில் ஒரு பருக்கை சாதம் கூட இல்லையே என்று மனம் வருந்தினர்.

அதனை அறிந்த மகான் வீட்டில் உள்ள எந்த உண் பொருளாயினும் சிறிது கொடுக்கும்படி வேண்டினார். அவர்களும் வீடு முழுக்க தேடிப்பார்த்து ஒரே ஒரு சிறு நெல்லி வற்றல் இருக்கக்கண்டு அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொண்டனர்.

இத்தகைய உயரிய குணம் கொண்ட தம்பதியினரின் வறுமையை போக்க சித்தம் கொண்டு மகான் ஆதிசங்கரர் மகாலட்சுமியை வேண்டி வழிபட்டார்.

மகாலட்சுமியும் அவரது மனதில் தோன்றி இத்தம்பதியினர் பூர்வத்தில் செய்த கொடிய வினைகளால் இந்த வறிய வாழ்க்கை வாழ வேண்டும் என்று விதி உள்ளதால் நாம் இவர்களுக்கு எவ்வகையிலும் உதவ இயலாது என்று கூறினார்.

அதற்கு மகான் ஆதிசங்கரர் என் பொருட்டு நீங்கள் இப்பிறவியில் உயர்ந்த குணங்களோடு வாழும் இத்தம்பதியினருக்கு வறுமையை போக்கி செல்வ வளம் அளித்தே ஆக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பின்பு மகாலட்சுமியை நினைத்து **“கனகதாரா ஸ்தோத்திரம்”** எனும் பாமாலையை இயற்றி பாடினார். மகாலட்சுமியும் மகான் ஆதிசங்கரரின் விருப்பத்தை பூர்த்தி செய்ய அத்தம்பதியினரின் இல்லத்தில், தங்க நெல்லிக்கனிகளை மழைபோல் பொழிவித்தார். அத்தம்பதியினரும் வறுமைநீங்கி வளமாக வாழ்ந்ததாக ஆதிசங்கரர் வரலாற்றில் காணப்படுகின்றது.

இன்னும் காலடியில் அந்த இல்லம் இருப்பதாகவும் அக்குடும்பம் செழிப்புடன் வாழ்வதாகவும் கூறுகின்றனர்.

இவ்விதம் மகாலட்சுமி இல்லத்திற்கு வராமலே, தங்காமலே, பொழிந்த அருளே இவ்வளவு நிறைவானது என்றால் அவர் நமது இல்லத்தில் வந்து தங்கி ஆசிபுரிந்தால் அக்குடும்பத்தில் சகல செழுமைகளுக்கும் எவ்வாறு குறையிருக்க முடியும் ?

நாளும் எண்ணிய அனைத்து மங்கல செல்வங்களும், பாக்கியங்களும் நிறைவாக கைகூடுவதுடன் தொழில், தனம், ஆரோக்கியம் ஆகியவைகளும் அந்த குடும்பத்தில் குறைவின்றி பெருகும் என்பது திண்ணம்.

இத்தகைய செல்வ வளங்களை தரக்கூடிய அன்னை மகாலட்சுமி, நமது இல்லங்களில் பரிபூரண சக்தியுடன் தங்கி ஆசீர்வதிக்கும் பொருட்டுடன் நமது ஆலயத்தில் **“மகாலட்சுமி ஆகர்ஷண மந்திர வேள்வி வழிபாடு”** மிகவும் சிறப்பாக நடைபெற இருக்கிறது.

இந்த வேள்வியில் அகத்தியர் பெருமான் தம் சீடர்களுக்கு உபதேசித்த மகாலட்சுமி ஆகர்ஷண மந்திரத்தை உச்சாடனம் செய்து சித்தாகம விதிப்படி சிறப்பாக செய்யப்பட உள்ளது.

## மகாலட்சுமி ஆகர்ஷண மந்திரம்:–

சித்த குருமார்களிடம் முழுமையாக பயிற்ச்சி முடித்த மாணாக்கர்கள், மூன்று வருட காலங்கள் மக்களிடம் தங்கி சேவை பணியாற்ற வேண்டும் என்ற விதி உள்ளது.

அதன் பொருட்டு மாணாக்கர்கள் தங்களது குருகுலத்தை விட்டு பல ஊர்களுக்கும் செல்வார்கள்.

இவர்களுக்கு பொருள் ஆசை வரக்கூடாது என்பதற்காக தாங்கள் சொந்தமாக எந்த பொருளையும் தன்னுடன் வைத்திருக்க கூடாது என்ற விதியும் உண்டு.

இதனால் இவர்கள் பணிபுரிகின்ற காலங்களில் மருந்துகளுக்கும், உணவிற்கும் மற்றும் எடுத்து செய்யும் நற்பணிகளுக்கும், சில சமயம் கடுமையான பொருள் தட்டுப்பாடு ஏற்படலாம்.

இதனை தமது மாணாக்கர்கள் நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு அகத்தியர் பெருமான் சர்வ சக்திவாய்ந்த **“மகாலட்சுமி ஆகர்ஷண மந்திரத்தை”** உபதேசித்து அனுப்பினார்.

மிகவும் கடுமையான பிரச்சினைகள் ஏற்படும் காலங்களில் அதனை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, மாணாக்கர்கள் அன்னை மகாலட்சுமியை இம்மந்திரத்தை சொல்லி வேண்டுவார்கள்.

அன்னை மகாலட்சுமியும் இவர்களின் வேண்டுதல்களை இயற்கையின் வாயிலாகவே செய்து முடித்துவிட்டு ஆசிர்வதிப்பார்கள். அதனால் மாணாக்கர்களும் மன கலக்கமின்றி பணியில் எந்த தொய்வும் இல்லாமல் மூன்று வருட காலங்கள் கடமையாற்றி முடிப்பார்கள்.

இத்தகைய சக்திவாய்ந்த மந்திரங்களை கொண்டு மேற்கண்ட வேள்வி நமது ஆலயத்தில் நடைபெற உள்ளது.

மகாலட்சுமி அன்னை மகிழ்ச்சியுடன் தங்கி வாசம் புரியும் பொருட்கள் அசல் முத்து, தங்கம், புனுகு, தாமரைமலர், தாம்பூலம், வலம்புரிசங்கு ஆகியவையாகும். எனவே **"மகாலட்சுமி ஆகர்ஷண மந்திர வேள்வி வழிபாடு"** கலசத்தில்

**அசல் முத்தும்**
**1 கிராம் தங்க நாணயமும்**
**10 கிராம் வெள்ளி நாணயமும்**







இட்டு வேள்வி செய்வதால் மகாலட்சுமியின் சக்தி இந்த புனித பொருட்களில் பரி பூரணமாக கூடும்.

இந்த கலசத்தில் வைத்த அசல் முத்து, தங்க நாணயம், வெள்ளி நாணயம் இவைகளை வீட்டில் வைத்து மனத்தூய்மையுடன் வழிபாடு செய்வதன் மூலம் மகாலட்சுமி அவர்கள் நாளும் நமது இல்லத்தில் தங்கி குடும்பத்தில் சகல செழுமையான வளர்ச்சிகளையும், எண்ணிய மங்களகரமான நிகழ்வுகளையும், ஆசீர்வதித்து கைகூட வைப்பார்கள் என்பது திண்ணம்.

இந்த சக்திவாய்ந்த மகாலட்சுமி வேள்வி வழிபாட்டுக்கு, தங்களால் இயன்ற காணிக்கைகளையும் அளித்து மகாலட்சுமியின் அருளையும் பெற வேண்டுகிறோம்.

இந்த வேள்வி கலசத்தில் வைத்து வழிபட இருக்கின்ற புனித பொருட்களை பெற விரும்புவோர் அலுவலகத்தை அணுகவும்.


அருள்மிகு அன்னை ஆதிபராசக்தி அறநிலையம்,
பள்ளிக்கரணை, சென்னை–600 100
044 22460820, 22462910, 9962884902
www.facebook.com/pallikaranaisakthi


I. ANAND & CO., TBM. Chennai-600 045. Cell:9841356480, Off.: 044-42107966